# DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025ம் ஆண்டு ஜூலை மாதம் வியாழன்கிழமை 31ம் நாள் சாட்சியாகிய ராஜ்குமார் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜ்குமார் | வயது | 51 |
| த/பெ. | முனுசாமி | இனம் | ஆண் |
| கிராமம் | பிரம்மபுரம் | தொழில் | பெயிண்டர் |
| சமயம் | | தாலூக்கா | |

**CC.No.97/2017**

(1 ,3,4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

**<u>முதல்விசாரணை 31.07.2025 அ.சா.5</u>**

1. நான் தற்போது பிரம்மபுரத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 கலைவாணி எனது அண்ணன் மகள். 11 வருடங்களுக்கு முன்பு எனது அண்ணன் மகளான கலைவாணியை 1ம் எதிரி திருமலைவாசனுக்கு பெரியோர்களால் நிச்சியக்கப்பட்டு திருமணம் செய்து வைத்தோம். 2 வருடங்கள் கழித்து கலைவாணிக்கும், 1ம் எதிரிக்கும் தகராறு ஏற்பட்டது. நாங்கள் சென்று சமாதானம் செய்து வைத்தோம்.

2. பிறகு கலைவாணி அரக்கோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரிகள் மீது 1ம் எதிரி திருமலைவாசன் மற்றும் மாமியார், மாமனார் மீது புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. கலைவாணி எந்த ஊரில் இருக்கிறார் என்றால் கர்நாடாக மாநிலம் கே.ஜி.எப்யில் இருக்கிறார். எதிரி திருமலைவாசன் என்பவரை திருமண சமயத்தில் தெரியுமா என்றால் தெரியும். எதிரி திருமலைவாசன், புகார்தாரர் கலைவாணியின் குடும்பத்தார்கள் உறவினர்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திருமணம் எப்போது, எங்கு நடைபெற்றது என்றால் அரக்கோணத்தில் உள்ள சர்ச்சில் நடைபெற்றது. குறிப்பாக எந்த இடத்தில் திருமணம் நடைபெற்றது என்பது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

4. எதிரிக்கும், புகார்தாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் திருமணத்தை பற்றி எனக்கு தெரியும். திருமணம் எப்போது, எங்கு நடைபெற்றது என்ற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. திருமணத்திற்கு பிறகு எதிரியும், புகார்தாரரும் எங்கு வாழ்ந்தார்கள் என்றால் எதிரி திருமலைவாசன் வீட்டில் வாழ்ந்தார்கள்.

5. திருமணத்திற்கு பிறகு புகார்தாரரும், எதிரியும் கே.ஜி.எப்பில் தான் வாழ்ந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புகார்தாரருக்கு 2 வது திருமணம் நடைபெற்றது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கும், புகார்தாரருக்கும் நடந்த திருமணத்திற்கு பிறகு கே.ஜி.எப்பிற்கு நான் சென்றேனா என்றால் இல்லை. புகார்தாரர் புகார் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

6. காவல் நிலையத்தில் நான் சாட்சியாக வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும், எந்த ஆவணத்திலும் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரிதான். புகார்தாரர் 2 வது திருமணம் செய்துக்கொண்டு வாழ்ந்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றும், நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் அழைத்ததின் பேரில் தான் நான் நீதிமன்றம் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I(FAC)
Arakkonam.